**This Question Paper consists of 31 questions and 8 printed pages.**
**8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.**

| **Roll No.** | | | | | | | | | | | | | **Code No. 58/S/A/TM** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

# TAMIL
# (தமிழ்)
# (237)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ______________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : **1.** ______________________

**2.** ______________________

---

**I. பொதுக்குறிப்புகள் :**

**1.** தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

**2.** வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத் தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

**3.** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

**4.** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

**5.** வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

**6.** உங்களது வினாத்தாளின் **Code** எண் **58/S/A/TM-A** விடைத்தாளில் எழுதுங்கள்.

**பொதுக் குறிப்பு**கள் :

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

# TAMIL

# (தமிழ்)

# (237)

கால அளவு : **3** மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : **100**

**குறிப்பு : (1)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

**(2)** விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

பொருத்தமான விடையை எடுத்து எழுதுக. **1×11=11**

**1** வசிட்டர் யார் ?

(A) இராமரின் குரு (B) தசரதனின் குல குரு

(C) வழிப்போக்கர் (D) இராமாயணத்தை எழுதியவர்

**2** கங்கை நதிக்கரையில் மிகுதியாக விளையும் பயிர் -

(A) கோதுமை (B) நெல்

(C) சோளம் (D) வரகு

**3** முதற் சங்கத்தில் தலைவராய் வீற்றிருந்தவர் -

(A) தருமி (B) இறையனார்

(C) அகத்தியன் (D) நக்கீரனார்

**4** ஏக்கறுதல் என்றால் என்ன ?

(A) நிலை நிறுத்தல் (B) கற்றல்

(C) பணிந்து நிற்றல் (D) எதிர்த்து நிற்றல்

5 வெருவி என்ற சொல்லின் பொருள் யாது ?

(A) மருவி (B) வெகுளி

(C) பயந்து (D) சாய்ந்து

6 சிலுவையில் அறையப்பட்ட ஆணி என வைரமுத்து எதனைக் குறிப்பிடுகின்றார் ?

(A) மதம் (B) ஜாதி

(C) கடவுள் (D) மொழி

7 வன்முறையற்ற வாழ்க்கை எப்போது சாத்தியம் -

(A) நன்றாகப் படித்தால் (B) கீழ்ப்படிந்து நடப்பதால்

(C) வகுப்பறைக்குள் கிடப்பதால் (D) சிந்தித்துச் செயல்பட்டால்

8 காளையர் கோவிலில் எழுந்தருளியுள்ள இறைவர்கள் -

(A) மூவர் (B) இருவர்

(C) ஐவர் (D) அறுவர்

9 காந்திக்கு பிரிவுபச்சார விருந்து எவ்விடத்தில் நடை பெற்றது ?

(A) நோடன் ஹார்ம் (B) சைடன் ஹாமில்

(C) அமெரிக்க அதிபர் வீட்டில் (D) னைடன் ஹாமில்

10 வினைச்சொல்

(A) நடத்தல் (B) படித்தல்

(C) வந்தான் (D) முருகன்

11 முன்னிலை பன்மை

(A) நான் (B) நாங்கள்

(C) நீங்கள் (D) அவர்கள்

**12** கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.

முத்தும் முத்தமிழும் பாண்டி நாட்டுச் சிறந்த செல்வங்களாகும். பாண்டியனுக்குரிய பொருனையென்னும் தாமிரபரணி ஆற்றுத் துறையிலே முத்துப் பிறக்கும். வைகையாற்றின் கரையிலே முத்தமிழ் சிறக்கும் என்று தமிழ்க் கவிஞர் கூறுவர். பாண்டிய நாட்டின் தலைநகரமாகிய மதுரை தொன்று தொட்டு வைகையாற்றின் கரையிலே வீற்றிருக்கின்றது. அந்நகரிலே தமிழ்ச் சங்கம் நிறுவி முத்தமிழையும் பாண்டிய மன்னர் முறையாகப் பேணி வளர்த்தனர்; தமிழ்நாட்டை நாடி வந்த பிற நாட்டுத் தமிழறிஞர்களுக்கு வரிசையறிந்து பரிசளித்தனர். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்று பழந்தமிழ் நூல்களில் பாராட்டப்படுகின்ற பாண்டிய மன்னன் புவிச் செல்வத்தோடு கவிச் செல்வமும் பெற்று விளங்கினான். மக்களாய்ப் பிறந்தோரெல்லாம் கல்வி கற்றல் வேண்டும் என்றும் அறிவுடை ஒருவனை அரசனும் விரும்புவான் என்றும் அவன் பாடியுள்ளான்.

**வினாக்கள் :**

(1) புவிச் செல்வத்தோடு கவிச் செல்வம் பெற்றவன் யார் ? **1**

(2) முத்து எங்கு பிறக்கும் ? அத்துறை யாருக்குறியது ? **3**

(3) புலவர்கள் வைகையாற்றை எவ்வாறு புகழ்கின்றனர் ? **2**

(4) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எழுதியுள்ள பாடல் கருத்தை விவரிக்க ? **3**

(5) பாண்டிய நாட்டின் தலைநகரம் எது ? அது எங்குள்ளது ? **3**

**13** பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்ட வீடென்க !
படிப்பிலார் நிறைந்த குடித்தனம் நரம்பின்
துடிப்பிலார் நிறைந்த சுடுகா டென்க !
அறிவே கல்வியம், அறிவிலாக் குடும்பம்
நெறி காணாது நின்றபடி வீழும்
இடிக்குரற் சிங்கநேர் இறையே எனினும்
படிப்பிலாக் காலை நொடிப்பிலே வீழ்வான் !
கல்லான், வலியிலான், கண்ணிலான், அவன்பால்
எல்லா நோயும் எப்போது முண்டு.

**வினாக்கள் :**

(1) கல்வி இல்லா வீடு எத்தகையது ? **1**

(2) படிப்பிலார் குடித்தனம் எதற்கு நிகர் ? **1**

(3) அறிவிலார் குடும்பம் என்ன ஆகும் ? **2**

(4) கல்லாதவன் எத்தகையவன் ? **2**

14 இராம இலக்குவர்கள் தசரதனைப் பிறிந்து செல்வதற்குக் கம்பர் கூறும் உவமை யாது ? **1**

15 உலகோர் மதிக்க எவ்வாறு வாழ வேண்டும் ? **1**

16 முதல் மின்னனுவியல் கணினி வடிவமைக்கப்பட்ட ஆண்டு யாது ? **1**

17 அஞ்சம்மா புருசனை எதனால் வெறுக்கவில்லை ? **1**

18 தமிழில் மொழி பெயர்க்க. **1**

(அ) Certificate

(ஆ) Cheque

19 (அ) சேர்த்து எழுதுக. $2\times\frac{1}{2}=2$

(i) நாடு + ஆம் + ஆல்

(ii) உலகு + இன்புறல்

(iii) துகள் + தீர்

(iv) கை + உற

(ஆ) கீழ்க்காணும் விகுதிகளைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு சொற்களை எழுதுக. **2**

(1) கை

(2) அல்

(இ) கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக. **2**

(1) நல்லவர்கள் மக்கள் அன்பைப் பெறுவர். ...................... மக்கள் வெறுப்பைப் பெறுவர்.

(2) இளமையில் உழைப்பவர் ..................... இன்புறுவர்.

(ஈ) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக. **2**

(1) முடுகும்

(2) மாரி

(3) கரந்தது

(4) தலம்

**20** பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. **2**

(1) ஆழம் பார்த்தல்

(2) கதை கட்டுதல்

**21** தஞ்சை மராட்டிய மன்னர்கள் எந்த மதத்தை சார்ந்திருந்தனர் ? **1**

**22** சாலைகள் பழுதடைந்திருப்பதன் காரணமாக மழை நீர் தேங்கி நோய்கள் பரவுவது குறித்து ஒரு பத்தியில் குறிப்பு எழுதுக. **4**

**23** குறவர் இன மக்களின் நன்றியுணர்ச்சியை வெளிப்படுத்துக. **5**

**24** பொது இடங்களில் புகைபிடித்தல் கூடாது என்பது குறித்த அறிவிப்பினை எழுதுக. **5**

**(அல்லது)**

நூலகத் திறப்பு விழா நடைபெறப் போவது குறித்த விளம்பர அறிவிப்பினை எழுதுக.

**25** (அ) ஒலி-ஒளி இவற்றுக்கான பொருள் வேறுபாடு கூறி வாக்கியத்தில் அமைத்து எழுதுக. **2**

(ஆ) அகவுதல் - முரலுதல் இவை எப்பறவைகளுக்குரிய ஒலிகளாகும் ? **2**

**26** நடக்கவிருக்கும் விளையாட்டு விழா பற்றி உனது பள்ளி தகவல் பலகையில் இடம்பெற வேண்டிய தகவல்கள் குறித்து ஓர் அட்டவணை தயாரிக்க. **5**

**(அல்லது)**

32, வாஞ்சிநாதன் தெரு, பெருங்குளத்தூர், சென்னையில் இருக்கும் நீ மதுரை, 22 வடக்கு ரத வீதியில் வசிக்கும் உன் சகோதரிக்கு ஆயிரம் ரூபாய் அனுப்புவதாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள பண அஞ்சல் படிவத்தைப் பூர்த்தி செய்க.

(உமது பெயர் முருகன் / வள்ளி என்று கொள்க. சகோதரியின் பெயர் விமலா எனக் கொள்க)

**இந்திய பண அஞ்சல் படிவம்**

தகவலுக்கான இடம்

1. ------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

............................................................

| | |
|---|---|
| பண அஞ்சல் எண் : 7 | பெறுநர் : |
| 2. ------------------------------ | 3. ------------------------------ |
| ------------------------------ | ------------------------------ |
| ------------------ வழங்கவும். | ------------------------------ |

[ ]

அனுப்புநர்

கையொப்பம் --------------------

------------------ இக்கோட்டிற்குக் கீழ் எழுதுதல் கூடாது ------------------

------------------ இரண்டாவது மடிப்பு ------------------

------------------------------------------------------------

4. பெற்றுக் கொண்டேன் ----------------------------------------

----------------------------------------

பெற்றுக் கொண்டவர் கையொப்பம் ----------------------------------------

------------------------------------------------------------

5. அனுப்புபவர் பெயர் மற்றும் முகவரி : ----------------------------------------

----------------------------------------

----------------------------------------

27 முத்தாச்சி தன் மகளுக்குத் திருமணம் செய்ய எவ்வளவு சிரமப் படுகின்றாள் என்பதை விவரிக்கவும் ? 5

**(அல்லது)**

காந்தியின் தென்னாப்பிரிக்க சுற்றுப் பயணத்திற்கான காரணங்களை எழுதுக ?

28 பிழை திருத்தம் செய்க : 5

(1) ஏலையின் இதயத்தில் இரைவண் இருப்பான்.

(2) கதிறவன் கிலக்கிள் எழுவான்.

(3) சிற்பி சிளையை செதுக்கினான்.

(4) யானை கத்தியது.

(5) முக்கணிகளின் கவைதான் எண்ணே !

29 நீ கண்டு களித்த அறிவியல் கண்காட்சி பற்றி உன் நண்பனுக்குச் சுவையான கடிதம் ஒன்று எழுதுக. 7

**(அல்லது)**

நீவிர் வாழும் பகுதியில் உள்ள சாலைகளைச் செப்பனிடக் கோரி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

30 ஏதேனும் ஒரு தலைப்பு பற்றி நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. 5

(1) ஒழுக்கம் விழுப்பம் தரும்.

(2) மாணவர் கடமை.

(3) உடற்பயிற்சியின் இன்றியமையாமை.

31 ஏதேனும் ஒரு தலைப்பு குறித்து இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. 10

(1) சுற்றுச் சூழல் பாதுகாப்பு.

(2) ஊடகங்களின் பயன்கள்.

(3) தொலை தொடர்பு சாதனங்களும் கல்வியும்.

---